# ஸ்ரீ ஐயப்பன்

## சரித்திரமும் படங்களும்





அரம்பன் என்ற அரக்கனுடைய மகன் மகிஷாசுரன் என்பவன் பிரம்மாவை நோக்கி நீண்ட காலமாகக் கடும் தவம் புரிந்து வந்தான். அவனுடைய கடும் தவத்தைக் கலைக்கப் பெரிதும் முயன்றும் முடியாமல் போகவே. இறுதியில் பிரம்மா அவன் முன் தோன்றி "பக்தனே! உன் தவபலத்தை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதை கேட்பாயாக" என்றார். மகிஷாசுரனும் மகிழ்ச்சியடைந்து "அய்யனே! இந்த பூமியில் பிறந்த யாரும் என்னைக் கொல்லாதிருக்கும் வரம் வேண்டும்", என்று கேட்டான். பிரம்மாவும் அரக்கன் கேட்ட வரத்தை அளித்து விட்டு மறைந்தார். மகிஷாசுரன் தான் பெற்ற வரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பூலோகத்திலும். தேவலோகத்திலும் பெரும் கொடுமைகள் புரிந்து வந்தான். மக்களும். தேவர்களும் அரக்கனுடைய கொடுமைகளுக்கு ஆளாயினர்.



# ஐயப்பன் சரித்திரம்

பண்டைய திருவிதாங்கூரில் பந்தளநாடு என்பதுவும் ஒன்றாகும். இந்த பந்தள நாட்டைப் பாண்டிய வம்சத்தில் தோன்றிய இராஜசேகர பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். இவன் வீரதீர பராக்கிரமத்தில் மிகவும் வல்லவன். முறையாக நாடாண்ட இவனது ஆட்சியில் மக்கள் எவ்வித குறைபாடுமின்றி வாழ்ந்து வந்தனர். அழகிய இராணியும், அன்பான குடிமக்களும், ஆண்டனுபவிக்கப் பெருஞ்செல்வமும் இருந்த போதிலும், தனக்குப் பின் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என்ற பெருங்குறை அந்த மன்னனுக்கு இருந்தது. பந்தள நாட்டுக் குடிமக்களும், அன்பேவடிவான தம் மன்னனுக்கு பிள்ளைச் செல்வம் இல்லையே என்று பெரிதும் வருந்தினர். சிவ பக்தனான மன்னன் இராஜசேகரனும், இராணியும் தங்களுக்கு வாரிசு வேண்டி சிவ பெருமானை தினமும் வழிபட்டு வந்தனர். மன்னன் மீது மாறாத அன்பு கொண்ட மக்களும் மன்னனுக்கு வாரிசு வேண்டி சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.



மகிஷாசுரனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் எல்லோரும் ஒன்று கூடி மும்மூர்த்திகளாகிய சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோரிடம் சென்று தங்களைக் காத்தருளும்படி வேண்டினர். ஆனால் மும்மூர்த்திகளும் தாங்கள் தனியாக அரக்கனுடன் போரிட்டு வெல்வது இயலாது எனக் கருதினர். இருப்பினும் தேவர்களும், மானிடர்களும் படும் தொல்லைகளைக்கண்டு மனமிரங்கி மூவரும் தம் தம் சக்திகளை எல்லாம் ஒன்று கூட்டி சண்டிகாதேவி என்னும் சக்தியைப் படைத்து மகிஷாசுரனை அழிக்கும்படி ஏவினர். சண்டிகாதேவியும் அரக்கன் முன்தோன்றி அவனுடன் கடும் போர் புரிந்து அவனை அழித்தொழித்தாள். தேவர்களும் மானிடர்களும் துன்பம் நீங்கி மகிழ்ச்சி அடைந்தனர்.



அரம்பனின் சகோதரன் கரம்பனுடைய புத்திரி மகிஷி தன்னுடைய சகோதரன் மகிஷாசுரனின் அழிவுக்குக் காரணமான தேவர்களைப் பழிவாங்க முடிவெடுத்து, அதற்கான சக்தியைப் பெற பிரம்மாவை நோக்கிக் கடும்தவம் புரிந்தாள். அவளுடைய தவத்தை மெச்சிய பிரம்மா அவள் கேட்டபடி சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் பிறந்த புத்திரனால் அல்லாது வேறு எவராலும் தனக்கு சாவு நேரக்கூடாது, என்ற வரத்தைக் கொடுத்து மறைந்தார். வரம் பெற்ற அரக்கி தேவலோகம் சென்று தேவர்களுக்குப் பல கொடுமைகள் புரிந்தாள்.



துர்வாசருடைய சாபத்தால் தேவர்களுக்கு நரை ஏற்பட்டது. பாற்கடலைக் கடைந்தெடுத்த அமுதம் ஒன்றினால்தான் நரைசாபத்தைப் போக்க முடியும் என்ற மகாவிஷ்ணுவின் யோசனையின் பேரில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். அதில் தோன்றிய அமுதத்தை அசுரர்கள் பறித்துக் கொண்டார்கள். அதை மீட்க மகாவிஷ்ணு மோகினி வடிவில் சென்று அமுதத்தை அசுரர்களிடமிருந்து மீட்டு தேவர்களிடம் கொடுத்தார். இதை அறிந்த பரமசிவன் மோகினி வடிவைக் காண மகாவிஷ்ணுவை அணுகினார், மோகினியின் அழகிய வடிவு கண்டு மனம் மயங்கினார். அதன் விளைவாக ஓர் ஆண் குழந்தை உருவாயிற்று. அந்த குழந்தையை புத்திரப் பேறில்லாத தன்னுடைய பக்தனான இராஜசேகர மன்னனிடம் ஒப்படைக்க பூமிக்கு கொண்டு செல்லுமுன், பரமசிவன் அக்குழந்தைக்கு ஒரு மணி மாலையை அணிவித்தார்.



மன்னன் இராஜசேகரன் பரிவாரங்களோடு பம்பாநதி தீரத்துக்கு வேட்டையாடச் சென்றான், அங்கு ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டு அப்பக்கம் சென்று பார்த்தான், குழந்தையைக் கண்டு அதிசயித்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது. ஒரு முனிவர் அங்கு தோன்றி அரசனிடம் "மன்னவா! நீ குழம்ப வேண்டாம், இவன் உன்னுடைய பிள்ளையில்லாக்குறையைப் போக்கவே அவதரித்திருக்கிறான், இவனை எடுத்துச் சென்று வளர்ப்பாயாக, கழுத்தில் மணிமாலை இருப்பதால் இவனுக்கு மணிகண்டன் என்று பெயரிட்டு வளர்த்து வா, பனிரெண்டு வயதில் இவன் யார் என்று நீ அறிந்து கொள்வாய்" என்று செல்லி மறைந்தார்,



பிள்ளையில்லாத குறையினால் வருந்திய பந்தள மன்னனும் பெரும் மகிழ்ச்சியடைந்து அக்குழந்தையைத் தன் அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். குழந்தையை ராணியிடம் கொடுத்து நடந்ததை எல்லாம் கூறினான், குழந்தையைக் கண்ட ராணியும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தாள், பந்தள நாட்டு மக்களும் மன்னனுக்குப் பிறகு நாட்டையாள வாரிசு கிடைத்தது பற்றி மகிழ்ந்தனர், ஆனால் வாரிசற்ற மன்னனுக்குப்பின் தானே மன்னனாகலாம் என்று மனக்கோட்டை கட்டி வந்த பந்தள நாட்டு திவான் மட்டும் வருத்தப்பட்டான்.



மணிகண்டன் சிறந்த ஒரு குருவின் கீழ் வித்தைகளை திறமையுடன் கற்று வந்தான் அவனது அசாதாரணமான திறமையைக் கண்ட குரு இவன் சாதாரண சிறுவனல்ல தெய்வாம்சம் பொருந்தியவன் என்று அறிந்து கொண்டார். கல்வியை முடித்து மணிகண்டன் குருதட்சணை கொடுக்கக் குருவை அணுகிய போது, அவர் தனக்கு குருதட்சணை எதுவும் வேண்டாம், பார்வையும் பேச்சுத்திறனுமற்ற தன் மகனுக்கு பார்வையும், பேச்சுதிறனையும் அளித்தருள வேண்டும் என்று கேட்டார். மணிகண்டனும் குருவின் மகனை ஆசீர்வதித்து கண் பார்வையும் பேச்சுத்திறனையும் அளித்து, குருவை வணங்கி, அரண்மனைக்கு திரும்பினான்.



இதற்கிடையில் ராணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மன்னன் மணிகண்டனுக்கு முடிசூட்ட தீர்மானித்தான். இதை அறிந்த திவான். விஷம் கொடுத்து மணிகண்டனைக் கொல்ல நினைத்தான். அது முடியாத நிலையில் ராணியை அணுகி "உன் சொந்த மகனிருக்க மணிகண்டனுக்கு முடி சூட்டல் தவறு. நான் சொல்வது போல் கேட்பாயானால் உன் மகனுக்கு முடிசூட்ட முடியும்" என்று சொல்லி சதித் திட்டம் தீட்டினான். மனம் மாறிய இராணியும் "என் மகன் முடி சூட்டிக் கொள்ள நான் எதுவும் செய்யத் தயார்" என்று கூறினாள்.



திவானின் திட்டப்படி ராணி தலைவலியால் அவதிப்படுவதாக நடித்தாள். திவானால் அனுப்பப்பட்ட மருத்துவர் "புலிப்பால் ஒன்றினால்தான் இந்நோய் குணமாகும்" என்று சொன்னார். புலிப்பால் கொண்டு வருவது அசாத்தியம் என்று அறிந்த மன்னன் தன் ராணியின் நலம் பொருட்டு புலிப்பால் கொண்டு வருபவருக்கு தன் ராஜ்யத்தில் பாதியைக் கொடுப்பதாக பறையறிவித்தான். காட்டுக்குச் சென்று திரும்பியவர்கள் "புலிகளைக் கண்டோம். ஆனால் புலிப்பால் கிட்டவில்லை" என்று கூறினர்.



துக்கத்துடன் இருந்த மன்னனிடம் மணிகண்டன் "நான் இருக்கும் போது நீங்கள் கவலைப்பட வேண்டாம்; நான் போய் புலிப்பால் கொண்டு வருகிறேன்" என்றான். அதற்கு மன்னன் "நீ சிறுவன் போக வேண்டாம்" என்றார். மணிகண்டனோ "என் தாயின் நலம் காக்க நான் அவசியம் போய் புலிப்பால் கொண்டு வருவேன். என்னைப் போய் வர அனுமதியுங்கள்" என்றான். மணிகண்டனின் நிர்பந்தத்தின் பேரில் அரை மனதோடு மன்னன் மணிகண்டனைக் காட்டுக்குச் செல்ல அனுமதித்தான்.



புலிப்பாலுக்காகக் காட்டுக்குள் சென்ற மணிகண்டனுடன் சிவபெருமானால் அனுப்பப்பட்ட பஞ்ச பூதங்கள் துணையாகச் சென்றன. நரைநோயால் பாதிக்கப்பட்ட தேவர்கள் அமுதம் உண்டு குணமானது கண்டு ஆத்திரம் அடைந்த மகிஷி தேவலோகம் சென்று தேவர்களுக்கு கொடும் தொல்லைகள் கொடுக்கலானாள். அதை அறிந்த மணிகண்டன் அங்கு சென்று மகிஷியை தூக்கி பூமியில் எறிய. மகிஷி அழுதையாற்றின் கரையில் வந்து விழுந்தாள். அவளுடன் போரிட்டு மணிகண்டன் மகிஷியைக் கொன்று தன்னுடைய அவதார நோக்கத்தினை நிறைவேற்றிவிட்டு புலிப்பால் பெறும் பொருட்டு புலிகளைத் தேடியலைந்தான்.



மகிஷியைக் கொன்ற நன்றிக்கடனுக்காக தேவர்கள் மணிகண்டனை வணங்கினர். சிவபெருமான் அவன் முன் தோன்றி, அவனுக்கு வாழ்த்துக் கூறி இந்திரன் ஆண் புலியாகவும் தேவர்கள் பெண் புலிகளாகவும் வடிவெடுப்பார்கள் என்றும் மணிகண்டன் புலி மீது அமர்ந்து மாளிகைக்குச் செல்லலாம் என்று கூறி மறைந்தார். பெண் புலிகள் புடை சூழ, ஆண் புலி மீது மணிகண்டன் வருவதைப் பார்த்த மக்கள், வியப்பும் அச்சமும் கொண்டு நடுங்கி இங்கு மங்கும் ஓடினர்.



புலி மீதமர்ந்து மணிகண்டன் வருவதை தூரத்திலிருந்து பார்த்து அதிசயித்த அரசன் இவன் சாதாரண மனிதனல்ல. பனிரெண்டு வயது இன்றுடன் முடிகிறது. அவன் யார் என்று இன்று தெரியும் என்று நினைத்து மாளிகை முற்றத்திற்கு வந்தான். மணிகண்டன் தன் தந்தையைப் பார்த்ததும் புலிமீதிருந்து இறங்கி, "தந்தையே நான் புலிகளைக் கொண்டு வந்திருக்கிறேன். உடனடியாக பாலைக்கறந்து தாயின் நோய் தீர்த்து புலிகளை அனுப்புங்கள்" என்றான்.

மன்னன் மணிகண்டன் யார் என்று அறிந்து கொண்டு, அவன் காலில் விழுந்து வணங்கி இனியும் தன்னைச் சோதிக்க வேண்டாமென்றும், மணிகண்டன் காட்டுக்குள் சென்ற பின் அங்கு நடந்த சதித்திட்டத்தை தான் தெரிந்து கொண்டதாகவும் தன்னை மன்னித்தருளி புலிகளை அனுப்பிவிடுமாறும் கேட்டுக்கொண்டான்.



மணிகண்டனும் "மன்னிப்பதற்கு எதுவுமில்லை, எல்லாம் என் இச்சைப்படியே நடந்துள்ளன, நான் பூமியில் எதற்காகப் பிறந்தேனோ. அந்த வேலை முடிந்துவிட்டது. இனி நான் தேவலோகம் செல்கிறேன்" என்றான். மன்னன், பகவானே! தாங்கள் எங்களுடன் இருந்ததன் நினைவாக தங்களுக்கு ஒரு கோயில் கட்ட நினைக்கிறோம். கோவில் கட்ட வேண்டிய இடத்தை எங்களுக்கு காட்ட வேண்டுமென வேண்டிக்கொண்டான். மணிகண்டன் ஒரு அம்பை எடுத்து எய்து இந்த அம்பு எங்கு போய் விழுகிறதோ அங்கு கோயில் எழுப்புங்கள் என்ற கூறி மறைந்தான். அந்த அம்பு சபரிமலையில் போய் விழுந்தது. அங்கு பதினெட்டு படிகளுடன், கிழக்கே நோக்கி மணிகண்டனுக்கும். பக்கத்தில் மாளிகைப் புறத்தம்மனுக்கும் கோவில்கள் கட்டமுடிவெடுத்தான்.



மணிகண்டன் கட்டளைப்படி, அகத்திய முனிவரின் ஆலோசனையுடன் இராஜசேகரப் பாண்டியன் ஊண், உறக்கமின்றி தானே மேற்பார்வை செய்து சபரிமலையில் பதினெட்டுப் படியோடு கூடிய அழகிய கோயிலைக் கட்டினான். ஆண்டுதோறும் லட்சோப லட்சம் மக்கள் ஜாதி மத பேதமற்று, மாலை அணிந்து 41 நாட்கள் கடும் விரதம் அனுசரித்து, ஐயனின் பூஜைக்குரிய நெய் நிரப்பிய தேங்காய், பூஜைப் பொருள்கள் அடங்கிய ஒரு முடியும், நடந்து செல்லும் போது வழியில் தேவைப்படும் உணவுப் பொருள்கள் அடங்கிய மற்றொரு முடியுமான இருமுடிக்கட்டுடன் ஐயப்பன் நாமம் சொல்லி பம்பை நீராடி சபரிமலை அடைந்து புனித பதினெட்டுப்படி ஏறி ஐயப்பன் அருள் பெற்று வருகிறார்கள். ஆண்டு தோறும் மகர சங்கராந்தி தினத்தன்று ஐயப்பன் பக்தர்களுக்கு ஜோதி உருவில் காட்சியளித்து ஆசி அளிக்கிறார்.



← **ஆரியங்காவு கோவில்:**
குமார சொருபத்தில் பகவான் குடி கொண்ட கோவில்.

**அச்சன் கோவில்:**
கிரகஸ்த நிலையில் பகவான் குடி கொண்ட கோவில்.
↓



### குளத்துப்புழா: →

இது பால பருவத்தில் பகவான் குடி கொண்ட கோவில்.



### பந்தளம்:

ராஜசேகர மன்னன் குடும்பத்தினரின் பகவான் திருக்கோவில். இங்கிருந்துதான் மகர சங்கராந்தியன்று தர்ம சாஸ்தாவுக்கு அணிவிக்கும் திருவாபரணம் கொண்டு வரப்படுகின்றது.

↓





### எரிமேலியிலுள்ள பகவான் திருக்கோவிலும் வாவர் கோவிலும்:

இந்து முஸ்லீம் ஒற்றுமையை காட்டுகின்ற வகையில் ஐயப்பபக்தர்கள் வாவர் சுவாமியை வழிபட்டு சபரிமலைக்குப் புனித யாத்திரை செல்லுகின்றனர். இக்கோவிலில் விபூதிதான் பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது.







**பேட்டைத் துள்ளல்:**

எரிமேலியில் பேட்டைதுள்ளாமல் எந்த ஒரு ஐயப்பக்தனும், கோட்டைபடி கடந்து பூங்காவனத்தினுள் செல்லக் கூடாது என்பது மரபு. ஐயப்பபக்தர்கள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி காட்டுவாசி வேடம் பூண்டு பேட்டை துள்ளும் காட்சி.





**பேட்டைத் துள்ளல்:**

எரிமேலியில் பேட்டைதுள்ளாமல் எந்த ஒரு ஐயப்பக்தனும், கோட்டைபடி கடந்து பூங்காவனத்தினுள் செல்லக் கூடாது என்பது மரபு. ஐயப்பபக்தர்கள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி காட்டுவாசி வேடம் பூண்டு பேட்டை துள்ளும் காட்சி.

**பம்பை:**

சாலக்காயம் வழியாக சபரிமலைக்கு வரும் பக்தர்கள் பம்பா நதியைக் கடக்க அமைக்கப் பட்டுள்ள பாலம்.







**புனித பம்பா நதி :**

மகரஜோதி உற்சவம் முடிந்த பின்னர் ஜனசந்தடியற்ற பம்பா நதிக்கரையில் காட்டுயானைகள் தண்ணீர் அருந்தும் காட்சி.

உற்சவ காலத்தில் பக்தர்கள் புனித பம்பா நதியில் நீராடி சன்னிதானம் செல்கின்றனர்.



↑

**பம்பா:**

பம்பையாற்றைக் கடந்து மறுகரையில் பம்பா விநாயகர், அனுமன், ராமர், சக்தி கோவில்களுக்குச் செல்கின்ற படி.

பம்பா விநாயகர், அனுமன், ராமர், சக்தி கோவில்களின் தோற்றம்.

↓





**சுப்பிரமணியம் பாதை** ↑

**நீலிமலை ஏற்றம்:**

கரிமலை ஏற்றம்போல் செங்குத்தான கடிய பாதை இது. இப்பாதையில் பக்தர்கள் செல்லும் காட்சி.

↓





### சரங்குத்தி:

கன்னி ஐயப்பபக்தர்கள் தங்களுடன் எடுத்துவரும் அம்பைச் செருகும் இடம். எந்த ஒருவருடம் கன்னி ஐயப்பமார்கள் தன்னை தரிசிக்க சபரிமலைக்கு வரவில்லையோ, அந்த வருடம் மாளிகை புறத்தம்மனை ஐயப்பன் திருமணம் செய்து கொள்வதாக சொன்னதாக ஐதீகம். வருடா வருடம் கன்னி ஐயப்ப பக்தர் லட்சக்கனக்கில் பெருகி வருவதால், மாளிகை புறத்தம்மனும் கன்னியாகவே காத்திருக்கிறார்.


### சபரி பீடம்:

ஸ்ரீ ராமர் காலத்தில் சபரி என்ற சன்னியாசினி தவமிருந்தாள், ஐயப்பன் அவதாரக்காலத்தில்தான் சபரிக்கு மோட்சம் கிட்டியது இந்தப் பகுதிதான் சபரி பீடம்.

↓




**ஆராட்டு** : சுவாமி ஐயப்பன் திருவுருவத்தை யானை மீதேற்றி மேள தாளத்துடன் பக்தர்கள், தேவஸ்தான ஊழியர்கள், சேவாசங்கத்தினருடன், புனித பாம்பா நதியில் நீராட்ட கொண்டு செல்லும் காட்சி. மற்றும் புனித பம்பா நதியில் பகவான் திருவுருவத்தை நீராட்டும் கட்சி.





**திருமுற்றம்:**
புனித பதினெட்டுபடிகள் ஏறியவுடன் பக்தர்கள் பிரதட்சணம் செய்து பகவான் அருளைப் பெறுகின்றனர்.




**கொடிமரம்:**
புனித பதினெட்டுபடிகள் ஏறியவுடன் பகவான் சன்னதியில் கொடிமரம் உள்ளது.


**ஓர் அதிசயம்!**
பந்தளத்திருந்து திருவாபரணத்தைக் கொண்டுவரும்போது அதனுடன் ஆகாயத்தில் ஒரு கருடன் வட்டமிட்ட வண்ணம் உடன் வரும். பின் கோவிலை மூன்று முறை வலம் வந்து மறைந்து விடும்.



பந்தளத்திலுள்ள ராஜ வம்ச அரண்மனையில் இருந்து திருவாபரணத்தைத் தலையிலேந்தி பக்தர்கள் சூழ சன்னிதானத்திற்குக் கொண்டு வருகின்றனர். மகர சங்கராந்தியன்று பகவானுக்கு இந்த ஆபரணங்கள் அணிவிக்கப்படுகின்றது.

மாளிகைபுறத்து அம்மையும் கடுத்த சாமியும் இங்கு குடிகொண்டுள்ளனர். இங்கு பிரதான வழிபாடு தேங்காய் உருட்டுவதும் வெடிவழிபாடுமாகும்.





மகர ஜோதி நாள் அன்று மாலை ஜோதி தெரிவதற்கு சற்று முன், சன்னதிக்கு எதிரே மலை முகட்டில் முன்பு எப்போதும் தோன்றாத நட்சத்திரம் தோன்றுகிறது.



பொன்னம்பல மேட்டில் மகரவிளக்கன்று பகவான் ஐயப்பன் ஜோதி உருவில் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.



ரிஷி பரசுராமரால் மகரசங்கராந்தியன்று சபரிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பன் திருவுருவம்,



